[1969 மார்ச் 22

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) சென்னை ஸ்ரீ கிருஷ்ண ஓடுகள், மட்பாண்டப் பொருள்கள் நிறுவனம் 60,500 ஓடுகளை நன்கொடையாக வழங்கியுள்ளது.

மதுரை நகரில் குடி நீர் நெருக்கடி.

* குறுகிய கால வினா எண் 3.—**திருமதி. கே. பி. ஜானகியம்மாள் :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை நகரில் என்றுமில்லாத வகையில் குடி தண்ணீர் நெருக்கடி ஏற்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், நெருக்கடியைத் தவிர்க்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

மு.ப. 9–30 (இ) மதுரையில் கடும் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதென்றும், ஆழ்துளைக் கிணறு விசையேற்றங்களுக்கு (deep borewell pumps) வகைசெய்வதற்கும், லாரிகளை வாங்குவதற்கும் அரசிடமிருந்து ரூ. 50 லட்சம் கடன்பெற நகராட்சிமன்றம் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளதென்றும், குறிப்பிட்டு மதுரை நகராட்சி மன்றத்தின் தலைவர் மாண்புமிகு உறுப்பினருக்கு அனுப்பிய தந்தியின் நகல் ஒன்றை அவர் அனுப்பியுள்ளார். விரிவான கடிதம் ஒன்று அனுப்பப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அத்தகைய கடிதம் எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை. நீர் வழங்கு மேம்பாட்டுத் திட்டங்கள் இரண்டினை மதுரை நகராட்சிமன்றம் மேற்கொள்வதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அவற்றில் ஒரு திட்டத்திற்கு ரூ. 89.3 லட்சம் செலவாகும். இத்திட்டம் மிகவும் முன்னேறிய நிலையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. மற்றொரு திட்டத்திற்கு ரூ. 197 லட்சம் செலவாகுமென முன்னர் மதிப்பிடப்பட்டது. சில இடர்பாடுகளினால் இத்திட்டம் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. நகராட்சியிடமிருந்து விரிவான கடிதம் வரப்பெற்றவுடன் இத்திட்டத்திற்கு முதனுரிமை அளிக்கப்பட்டு, அதைக்குறித்து மேலும் ஆய்வு செய்யப்படும்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, தற்பொழுது ஏற்பட்டிருக்கும் தண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு உடனடியாக வைகை அணைக்கட்டிலேயிருந்தோ அல்லது பெரியாறு அணைக்கட்டிலிருந்தோ தண்ணீர் திறந்துவிட அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இரண்டாவதாகத் திட்டப்பட்டத் திட்டத்திலிருந்து பேரணை நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் கொண்டுவருவதற்குப் பதிலாக வைகை அணையிலிருந்து கொண்டுவருவதற்கான ஆய்வுகளையெல்லாம் தனியாக ஒரு பப்ளிக் ஹெல்த் இன்ஜினியரிங் சப்-டிவிஷன் மூலமாக ஆராய்ச்சிசெய்து, அது முடிந்தபின் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும். அதனால் சீக்கிரத்திலேயே இப்பொழுது ஏற்பட்ட நெருக்கடியைத் தீர்க்க முடியுமென்று அரசாங்கம் நம்புகிறது.

திரு. ஏ. முனியாண்டி : தற்போது ஏற்பட்டிருக்கும் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்கு மஞ்சளாறு உபரித் தண்ணீரை மதுரைக்குக் கொண்டுவர ஆலோசனை செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : எந்த வகையிலே எந்தப்படியான திட்டத்தின்மூலம் விரைவில் மதுரையிலே ஏற்பட்டிருக்கும் தண்ணீர் நெருக்கடியைத் தீர்க்க முடியுமென்று தந்தியைத் தொடர்ந்து கடிதம் எழுதுவதாக மதுரை நகராட்சித் தலைவர் அவர்கள் தந்தியிலேயே தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் விரிவான கடிதம் வரவில்லை. எனவே, நகராட்சி எந்தவிதமான எண்ணம் வைத்திருக்கிறது என்பதைப் பரிசீலனை செய்து அதற்குப் பிறகு கனம் உறுப்பினர் அவர்களின் கருத்துப்படி வேறு பல ஆறுகளிலிருந்து தண்ணீரைக் கொண்டு வருகின்ற முறைகளை அரசாங்கம் ஆலோசிக்கும்.

1969 மார்ச் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள், 415, 416, 417 ஆகிய மூன்றையும் ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம்

சித்த வைத்திய முறை.

*415 வினா : **திரு. வை சுவாமிநாதன் :**
புலவர். பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் மாவட்ட மருத்துவ மனைகளில் சித்த மருத்துவப் பிரிவைத் தொடங்கும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், எந்த ஆண்டில் தொடங்குவதாக உத்தேசிக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) உண்டு.

(இ) இந்த ஆண்டிலேயே திருச்சிராப்பள்ளியில் தொடங்கியாயிற்று 1969–70 ஆண்டில் மேலும் ஐந்து மாவட்ட மருத்துவமனைகளில் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

*416 வினா : **திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

சித்த வைத்தியத்தின் சிறப்பினை மக்கள் உணரும்பொருட்டு விளம்பர அதிகாரிகளை நியமிக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

*417—*Q.* THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state —

(*a*) whether the Government have opened a sidha dispensary in the premises of the Tamil Nadu Secretariat, and

(*b*) if so, the purpose that would be served ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) சித்த வைத்திய முறைப்படி சிகிச்சைபெற விரும்புபவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்துதருவதற்காக.

புலவர். பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மஞ்சட்காமாலை, க்ஷயரோகம், குஷ்டம், புற்று போன்ற கடுமையான நோய்களைச் சித்த வைத்திய முறைகளின்மூலம் போக்க முடியும் என்பது அரசுக்குத் தெரியுமா ? அவ்வாறாயின் அம்மருத்துவப் பயிற்சி பெற்ற ஒருவரை அந்த முறைகளுக்குத் தனி நெறியாளராக அமைத்துத் தனி ஆய்வுக்கூடம் ஒன்றைத் தமிழகத்தில் உருவாக்கிச் செம்மையுடன் பேணிக்காக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சித்த மருத்துவத்தின் நல்ல சிறப்புக்களையெல்லாம் அறிந்துதான், அதனால் பல நோய்களுக்கு நல்ல சிகிச்சை அளிக்க முடியுமென்று நம்பிக்கையிருப்பதால்தான் அரசாங்கம் சித்த வைத்திய முறையை ஏற்றுக்கொண்டு, கல்லூரிகளுக்கும், மருத்துவ மனைகளுக்கும் ஏற்பாடு செய்துகொண்டு வருகிறது என்பதைக் கனம் உறுப்பினரவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். மற்றவை யோசிக்கப்படும்.